
உ

ஸ்ரீ செந்திலாண்டவன் துணை

காரை, சிவக்கொழுந்து தஞ்சராயன் என்பவர்
மனைவியையும் சோரநாயகனையும் வெட்டி
திருப்பனூர் சந்தையில் கூரிட்ட
விபசார படுகொலை

வேடிக்கைச் சிந்து

முதற் பாகம்



இஃது

வித்வான் விஜயபுரம்

வெ. நா. சபாபதிதாசரால்

மதுரை விக்டோரியா பிரசில் பதிப்பிக்கப் பெற்றது

இரண்டாம் பதிப்பு

காப்பி 5000] 1923 விலை அணா 1

உ

ஸ்ரீ செந்திலாண்டவன் துணை.

விருத்தம்.

வள்ளி சோலையும் வெட்டிமாமி வீடனுப்பி சென்னி
கணவுடன் உடலைப்பற்றி கடுகி சந்தையில் கூறிட்ட
இணையிலா சத்தவீரன் இறந்திட வேடிக்கைப்பா
அணைவருமறிய வெங்கள் ஆனைமுகத்தோன் காப்பே

சிந்து பல்லவி.

விபசாரம்பாரீர் வெட்டுண்ட ஆண் பெண்ணின்
வேடிக்கைகேளீர்

அனுபல்லவி.

அவுசாரிக் கழுதையை அருந்துசோரனுடன்
சகசாய் திருப்பனூர் சந்தையில் கூறிட்ட (வி)

சரணங்கள்.

(1) சீர்பெரும் திருநாகை சேர்காரைக்காலதில்
சிவக்கொழுந்தஞ்சான் செய்கொலையாமிதில்
பேர்பெரும்பாதக பிழையை உரைப்பதில்
பிரபல சிந்தனை பேணிவிடுப்பதில்
கவலைகொள்வீரே விபசாரபுலிகட்கு
கருத்தைதவிர்வீரே.

(2) சேற்றிசிவக்கொழுந் தென்னும்பேர்பூண்டோனும்
செப்பியமான குடும்பத்தியல்போனும்
ஏற்றுமதிக்கெலாம் ஏஜெண்டிவன்தானும்
ஏற்றபடகுக் கிவனேதலைவனும்
மூர்க்கமுற்றோனும் நிமிர்தாதாரர்க்கெலாம்
முதன்மை பெற்றோனும்

(3) அய்யாபிரத்தமேல் ஐவிஜாடயோனும்
அனுதினம் தருமத்தில் ஆசைமிகுந்தோனும்
பர்தா அக்காளிலை பாக்கியமிகஜோராம்
பாலும் நீர்போல இருவர்மனைமேராம்
இயல்புற்றவாழ்வாம் இவர்கள் பந்தில் மற்றோர்
எல்லரும் தாழ்வாம்

(4) மங்களம் தன் அக்காள் மகிழ்புரவாழ்ந்திட
மகள் தனபாக்கியம் ரதிபோல்வளர்ந்திட
தங்கம்போல் மகள் தனை தாங்கிவளர்த்திட
தம்பிக்கே கல்யாணம் செய்து முடித்திட
எண்ணமதுண்டாள் தம்பிக்கே பெண்தர
இஷ்டமேயுண்டாள்

(5) மாமனை கணவனென் மனதுற்றவள்சொல்ல
மற்றோனுக்கீந்திடில் மடிவேனெனவிள்ள
பூமனேற்றோர்களை புத்திரனுமில்லை
புஷ்பவதியாகி ரதிபோலழகுள்ள
வெளிவாராதாளுள் தனபாக்கியம்வெகு
விர்ப்பனியானாள்

(6) மாங்கல்யத்திருவிழா மகிழ்வாய் நடத்திட
மாமனுடன் இவள் தம்பதியேகிட
நீங்காதபிரீதியாய் நேசமிகுந்திட
நித்திரை தன்னிலும் வொற்றுமனதிட
சந்தோஷமுற்றார் ரத்தினம் போலொரு
மைந்தனும்பெற்றார்.

சரணவேனும் காணவேணாம் என்ற மெட்டு.

(1) பார்வையில் மதன்ரதிபோல்வாழ மங்கை
பத்தினிபோல் தன் நடைகள் நீழ சொந்த
பத்தாவை மோசித்துமிவள்சித்தம் வேர்பயல்மேலுண்டான்
பாவி ஆசைமேவி.

(2) பத்துமெலக்ஷ மாஸ்த்தியுள்ள சிறுவன் தெரு
பக்கமேவசிக்கும் பயலொருவன் பெயர்
பத்மநாதனென்பவனை நத்தியே ஆசித்துமவள்
பாவ மதி மேவ

(3) நாடகீயலாச்சு நிந்த சொல்லை சிலர்
நம்ப எதிர் பார்த்தவர்களில்லை சொந்த
நாயகன் சந்தேகிய உபாயமதறிய வென்றே
நண்ண மன முண்ண

(4) நேசிமனையாளுடனே வாழ்ந்தான் தன்னுள்
நேரியசந்தேகமதால் தாழ்ந்தான் இதன்
நிஷயகுறி சிலதை பக்ஷமாயிருந்தறிந்தே
தெரிந்தான் மனம் முறிந்தான்

நொண்டிச்சிந்து.

கண்டு விட்டான் ஜார்டை கணவன் இவர்கள் கருத்தைபருக்க
மனம் மிகத்துணிந்தான் சென்று விட்டான் தனிவிடமே
போஜனைகள் சிந்தைதனை வேணமட்டும் தேருதல் செய்தான்
அண்டமனம் பொறுக்கவில்லை விழிபொறிய ஆங்காரம் மேல்படர
அழுதுநின்றான் பண்டு தொட்டகத்தி எடுத்தான் சானைபின்
பள பள பளவென பசுகுவழுண்டான் கொந்து விட்டான்
இவன்மனமும் வங்கைகமிகோட்டமெலாம்மனைவிமேல் [illegible]
[illegible]

வேளாங்கண்ணியில் நானுநாள் வேலையிருக்கென் றாயகி என்றான்
சந்தோஷமாய் வார்த்தைகள் விண்டான் பணப்பெட்டியின் சாவி
எடுத்தவள் கையில் தந்திடலுண்டான் வந்திடநாளாகுமென்றான்
வருமளவும் வருத்தமிலாமனையைப் பொருத்தமென்றான் உந்திவெளி
கிளம்பிவிட்டான் சமயமுண்டு வொதுங்கி மனையுள்
வந்து பதுங்கினின்றான் அந்தியிருள் எதிர்பார்த்தான் பரணைதனில்
ஆவேசமாகிட மேல் அமர்ந்திருந்தான். (தந்தின)

புருஷன் பரணைமேலிருப்பது தெரியாது மனைவியும் சோர
நாயகனும் சரசசல்லாப வார்த்தையாடல்
மஞ்சு நிகர்குந்தள மின்னே என்ற மெட்டு.

(1) (தன) ஆசைதுரை ராஜமன்மதா—
உனைப்பிரியேன்—கனப்பொழுதும்
அன்பதற்கிசைந்த செல்வித—உனை
அப்புறம் விடவொப்புமோ மனம் மெய்ப்பிட எதிர்செப்பிடவோ
உடன் அங்கஜனை வென்ற சிங்கமே—இருமனமும்
வொருமனமாய் ஆனந்திருக்கவேணும் தங்கமே

(2) (பத்) சித்தினி ஊர்வசி ரம்பைபோல்—
எனக்கிசைந்த—எனக்குயிலே
செப்புதல் மனதிலுற்றால்—என்
ஜென்மமழியினுமுனை விடுகிலேன் கண்மணித்திகழுண்
மை முக்கனி செல்வியே வோர் முத்தமிடடி—இரு
உயிரும் வொருஉயிரென் சிந்தையில் நல்லெண்ணமிடடி

(3) (தன) கட்டிரஉனை மறப்பேனோ கணப்பொழுதும் தினப்
படியே கண்ணிமை சாணிருப்பேனோ—என்
காதலன் தனைப்பேதையென்றனை நீதையுண்ட இம்மாதை
நீர்கிடில் கண்ணியும் உயிர்தரிப்பேனோ—இனம்பிசக
குணங்கசக்கப்பி என்மனம் சகிப்பேனோ

(4) (பத்) கட்டி வொருமுத்தமிடடி என்துயிரே இளம்பயிரே
காதலி கவலே விடடி—என்
காலமும் உனை ஆளுவனென வேலவன் திரு ஆலயந்தனில்
கற்பூர சத்தியமிடுவேன்—பயம்விடுப்பாய் நயம்
தொடுப்பாய் கண்ணிமைமரக்கில் கெடுவேன்

இஃதுஞ் கம்பநாட்டார் கழரியகவிபோல்

விடங்கொண்ட மீனைப்போலும் வென்றழல்மெழுகுபோலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற் பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம்போலும் கலங்கினான் இலங்கை
(வேந்தன்

என்றபடி தன்னை மறந்து சத்தியுடன் பரணை விட்டிறங்கி

புருஷன் கொலை செய்யத்துணிதல்

செந்தின் மாநகரந்தனில் மேவிய என்றமெட்டு

(1) பாவியாம் மனையாட்டி செய் சோரமும்
பார்க்க வார்தனல் கொண்டான்—இவர்
சேர்க்க மனமுற நின்றான்—பெரும்
பாவி பத்ம நாதனொடிவள்
மேவியே மனையாள் மகிழ்ந்திட
பக்குவம் செய்யவேணுமென்றெண்ணியே
பரணைமேலேறியே நின்றான்—எதிர்
பயலும் செருக்கியும் கண்டான்

(2) கண்டதும் மதிமாறி பிசகிட
கத்திகை யேந்தியே நின்றான்—எதிர்
காலனைப் போலவே சென்றான்—இவர்
காணலை வையல்வேண ஜோக்குர
மானம் நீக்கிட வேணபோக்குர
கண்டனன் நடுமத்தியில் சென்றுமே
கட்டழகியை கண்கண்டான்—சோர
துட்டனை முன் தலையிண்டான்

(3) வேசிதன் மனையாட்டி தலைமயிர்
வேகமாய் முன்கர முற்றான்—உடல்
பாகமும் துண்டிட லுற்றான்—கோப
வேஷமாகியே ரோஷமாகவே
பேசலாதுடன் வாசல் தள்ளியே
வெட்டியே துடைமார் தலை கால்களை
வேடிக்கையாய் கழித்திட்டான்—பின்பு
வேணமனைக்குடர் பட்டான்

(4) ரெத்தமா வெளிசுத்த பயமெனும்
நேர்மை மாற்றிட லானான்—சுய
ஏர்மை யிலாதமே போனான்—உடன்
ரெண்டு தலைகளும் வொன்று சேர்புர
நின்று முடிவர அன்று சூத்திரம்
ரெஞ்சிதம் மிக பூபடி கூட்டியே
கோர்க நற்பொட்டுகளிட்டான்—கூட
நேர்த்தி சேர்வாசனையிட்டான்

கலித்துறை

சோனை பெட்டியுள் தலைரெண்டு யிட்டு சீட்டெழுதி
நேராக அக்காள் வாழ்மனைக்கேற்ற வினைவதுண்டு
கூரக்கூலி ஆள்வசமாக கொடுத்தனுப்ப
பூராயலெட்டர் உடனே எழுதப்புரப்பட்டனே

அகவல்

அன்புருமெந்தன் அக்காள் தமக்கு
இன்புர வெழுதும் ஏற்ற விஞ்ஞாபனம்
மகனுடன் நானும் மைந்தனும் க்ஷேமம்
திகழுடன் தங்கள் க்ஷேமம் விடுபீர்
ஆள்வசம் நானும் அனுப்பிய பெட்டியுள்
மேல்விலை ஜாமான் மிக்க இருப்பதால்
ஆவியாய் பெற்று அகமகிழ்கொண்டு
உபிடாமனமும் கொள்க சந்தோஷம்
எந்தன் கொழுந்தி இரத்தின மரியலே
அந்தமாய் பெட்டியை அவள்முன் திறக்கவும்
சஞ்சலம் நீங்கி சந்தோஷத்துடன்
அஞ்சாமனமாய் அகமகிழ்ந்திடவும்
மூத்தமகனின் மூடபுத்தியால்
கோத்திரத்திழின் கூட்டினுள்பாவி
பாவி என்றென்னை பந்துடனயாவரும்
கோபியா தென்னைகொண்டனைத்தாள்வீர்
உருப்புகள் கொண்டு உற்றகூரிடவே
திருப்பனூர் சந்தை செல்குறே னின்றே
அப்பமதகற்றி ஆத்திரம் நீக்கியே
பையனை மட்டும் பாதுகாத்திடுவீர்

லாவணி—மெட்டு

(1) வெட்டி வெக்கொழுந்தும் அட்டியிலா உடனே
விரைவாய் கைவண்டி தனிலேற்றி ஏற்றி
விடியுமுன் சந்தைசடி தடிய புகுந்து விட்டான்
விபரீதவேடிக்கையே நேற்றி நேற்றி
(2) க்லாவின் கம்பிதனில் கால்துடைமாரதனை
கட்டி ஆட தொங்கவிட்டான் இட்டான்
கண்டதண்டமுதாக மண்டை வொன்று தவிர
கட்டைபிட்டை கைகத்தி தொட்டான் தொட்டான்
(3) வேசரிப்பாயே இவன் பேஷாய் கல்லாவினூர
விடித்த சனிக்கிழமை விந்தை விந்தை
வேலை பேரிதைக் கண்டு காணவபொரிய
மின்னொ[illegible] வைமுன்டார் சந்தை சங்கை

கும்மி

(1) பார்க்கும் ஜனங்களை கூப்பிடுவானிவன்
பாங்காய் பயம் விட்டு வாருமென்றான்
யேர்க்கிந்தி ஆடும் டோவும் இதுவென
மேட்டியாய் வாங்கும் கரியதென்றான்

(2) சோளாவுருட்டிட நல்லதரியிது
சேங்கரி குர்மா குணம் மிகுக்கும்
ஆளனை மோசித்த உத்தமியின்கரி
அல்லோரும் வாங்கிப் புசிப்புமென்றான்

(3) இன்று தப்பினால் கொழுப்புக் கிடாக்கரி
என்று மகப்படா தென்று சொல்லி
தண்டோரா போடவோர் ஆள்வேணுமென்றுமே
தன்மையாய் வார்த்தைகள் தான்புகன்றான்

(4) இவ்விதமாகவே சந்தையி லாற்றிட
எட்டிவிஷயம் போலீசரிந்து
மெவ்விய தோட்டா துப்பாக்கிகளோடுமே
மேட்டியாய் வந்து வளைந்துகொண்டார்

(5) கண்டதும் போலீசை கத்திகைவைத்துடன்
காதலித்தே அவர் பின்துடர்ந்தான்
மண்டலம் கணடிடகெசெடுத்தார் உடன்
மண்ணர் பிரஞ்சியரின் ஆளுகையில்

(6) தலைகொண்டு சென்றவன் தீர்வைச்சாவடியில்
தக்கவிசாரவு டனேகினர
நிலையுண்ட சேவகர்யாது பெட்டி என
கிர்க்கவென்றோட்டில் விருத்திவிட்டார்

(7) பெட்டியில் யாதென்று கேட்டிடசேவகர்
பின்னமரிந்திடா கூலியவன்
அட்டியிலாது சிவக்கொழுந்தஞ்சான்
அக்காளுக்கேதோ அனுப்பல் என்றான்

(8) சாவடி தன்னில் நடக்கவுண்டாகிடில்
தன்பெயர் சொல்நீவிடுவீர் என்றார்
போக அனுமதி தாருமென்றானங்கே
பூங்காவனமெனும் கூலியவன்

(9) இம்மொழிசொல்லிட சேவகர்கேட்டுடன்
இஷ்டர் நமக்கு மவரெனவே
தம்மொழி பெட்டியின் தாக்கல் இனிஸ்பெக்ட
சாம்பசிவையர்க் குரைத்திடவே

(10) ஐயர்சாற்சாவியயர்ந்திரும் நித்திரையில்
ஆத்திரமாய்யே சேவகனை
பையவே டாரட்டா பெட்டியை நீ என்று
பாய்ந்தே கோபத்துடனே மொழிய

(11) சோரமரிந்தபின் சேவகனீரகியே
கொண்டு குரட்டைகுமிந்து நின்று
ஆபத்தரிந்திடா பெட்டிசுள்ளாணியை
அப்போபிடிங்கி அதைத்திறக்க

(12) காவுளார அத்தம் போட்டிட சேவகர்
கண்ணி உன் ஐயர் புலம்பிடவே
கோபெண்டைகூவியாள கூவிஅலரிட
குப்புகும்பாய் ஜனம் கூடிவிட்டார்

(13) புக்கமாத்தை பிடித்தசனியனும்
பிள்ளையாரையும் பிடித்ததுபோல்
அங்கம்வளர்த்திட்ட கூலிக்குச்சென்றவன்
ஐயோ அவனும் அடிமிருத்தான்

(14) கையில்விலங்குதாகாரை ஜெயில்க்கிவண்
கப்பிடபதாவில் கொண்டுசென்றார்
கையவயர்பற்ற கோவென்றலறினன்
நாட்டுபேவாம் மற்றதைபாகம் ரெண்டில்

(15) பாவலர்மெச்சும் விஜயபுரநகர்
பாக்கியன் சபாபதி தாசனின்பா
ஆவலாய்பாடி சபாமெச்சன்பூவுளோர்
ஆறுமுகமும் நமஸ்கரிப்பேன்

இதன் இரண்டாம் பாகத்தின் விமரிசையே விமரிசை விலை அணா 1.

மதுவிலக்குத் திர்வுகோல் 6 பைசா.

பாரத நாட்டின் சிரப்பு 6 பைசா.

வியாபாரிகளுக்கு விலை சரசமாய் கொடுக்கப்படும்

வெ. நா. சபாபதி தாசர் அன்சன்ஸ்

V. N. S. ஆறுமுககினதர்

சுப்பிரமணியபுரம் திருப்பரங்குன்றம் ரோடு மதுரை டவுன்.